# IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

## O.S.No. 215/2018

சாட்சி : DW– 2

பெயர் : திரு.ரவிச்சந்திரன் தேதி : 01.09.2026

(சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்பட்டார். )

**குறுக்குவிசாரணை**:– (5 முதல் 8ம் பிரதிவாதிகள் தரப்பில்)

வாதியும், 4ம் பிரதிவாதியும் எனது மகன்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்துகள் எனக்கு 16.09.1987 தேதியிட்ட பாகப்பிரிவினையின் படிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அந்த சொத்து என் தகப்பனார் வீரப்பபிள்ளைக்கு பாத்தியப்பட்டு இருந்து பின்னர் பாகப்பிரிவினை ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த சொத்தை தான் நானும், எனது மனைவி மற்றும் பிள்ளைகளும் அனுபவித்து வந்தோம் என்றால் சரிதான். என் மனைவி 2021ம் ஆண்டில் இறந்துவிட்டார். நானும், எனது மகன்களும் ஒன்றாகதான் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். 14.01.2008அன்று வழக்கு சொத்தை பொறுத்து ரத்தினம் மனைவி புவனேஸ்வரி என்பவருக்கு ஒரு பொது அதிகார பத்திரம் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். மேற்படி பொது அதிகார பத்திரத்தில் எனது ஒரு மைனர் மகனுக்காகவும் நானே கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். பின்னிட்டு மேற்படி புவனேஸ்வரி 26.05.2008ல் 2 கிரய ஆவணங்களின் மூலமாக 3ம் பிரதிவாதி அய்யந்துரைக்கு சொத்தை கிரயம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி புவனேஸ்வரியிடம் நான் தொகை பெற்றுக்கொண்டு ரசீதும் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் 2 கடைகள் உள்ளது என்றால் சரிதான். அதில் ஒன்றில் ஒரு காப்பி கடையும், மற்றொன்றில் நகை அடகு கடையும் செயல்பட்டு வருகிறது என்றால் சரிதான். தாவா சொத்திலுள்ள வீட்டில் நாங்கள் குடியிருந்து வந்தோம்

R Velaras Digitally signed by R Velaras Date: 2026.09.01 17:41:32 +0530

I Additional District Judge,

Salem

என்றால் சரிதான். வழக்கு சொத்தை அய்யந்துரை கிரயம் பெற்றுவிட்ட பிறகு வழக்கு சொத்திலுள்ள வீட்டில் நாங்கள் தொடர்ந்து குடியிருந்து கொள்வதாகவும் அதற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1250/-ஐ அவருக்கு வாடகையாக செலுத்துவதாகவும் ஒப்புக்கொண்டேன் என்றால் சரியல்ல. மேற்படி கடைகளுக்கு உண்டான வாடகையையும் அய்யந்துரையையே வாங்கி கொள்ளும்படி நாங்கள் சொல்லிவிட்டோம் என்றால் சரியல்ல. பின்னிட்டு வாடகைதாரர்களை மிரட்டி நானே வாடகையை பெற்று வருகிறேன் என்றால் வாடகைதாரர்களை மிரட்டவில்லை நான் தான் ஆரம்பம் முதலே வாடகையை வசூல் செய்து வருகிறேன். 4ம் பிரதிவாதி அவரது பாட்டி விஜயலட்சுமி மூலமாக இதே சொத்துகளை பொறுத்து பாகப்பிரிவினை மற்றும் தனிச்சுவாதீன பரிகாரம் கோரி அ.வ.எண்.189/2008 என்ற வழக்கை சேலம் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். மேற்படி வழக்கு 07.08.2012 அன்று தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் வழக்கறிஞர் பொன்முடி மூலமாக ஆஜரானேன். கிரயத்திற்கு பின்னிட்டு வழக்கு சொத்தின் சுவாதீனத்தை ஒப்படைக்கவேண்டும் என்று அய்யந்துரை கேட்டாரா என்றால் இல்லை. மேற்படி அய்யந்துரை கடைகளுக்கு உண்டான வாடகை பாக்கி தொகையும், வழக்கு சொத்தின் சுவாதீனத்தையும் அவரிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கேட்ட காரணத்தினால்தான் நான் என்னுடைய மற்றொரு மகனை வைத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2021ம் ஆண்டில் மேற்படி அய்யந்துரை இறந்துவிட்டார். மேற்படி அய்யந்துரைக்கு 5 முதல் 8 பிரதிவாதிகள் வாரிசுகள் என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கான பட்டா மற்றும் நகராட்சி வரி விதிப்பு அய்யந்துரை பெயருக்கு மாறிவிட்டது என்றால் சரிதான். மேற்படி வரியை அவர்தான் செலுத்தி வந்தார் என்றால் சரியல்ல. அவர் பெயரில் நான் செலுத்தி

R Velaras

Digitally signed by R Velaras
Date: 2026.09.01 17:41:37 +0530

I Additional District Judge,

Salem

வந்தேன். அய்யந்துரை பெயரில் வரி நான் செலுத்துவதாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் சுவாதீனத்தை அய்யந்துரையின் வாரிசுகளிடம் ஒப்படைக்காமல் இருப்பதற்கும், வழக்கு சொத்திற்கான வாடகை பாக்கியை அவர்களிடம் செலுத்தாமல் இருப்பதற்கும் தவறான சங்கதிகளோடு எனது மகனை வைத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சேகர் என்பவர் காப்பி கடையையும், தியாகராஜன் என்பவர் நகை அடகு கடையையும் வழக்கு சொத்தில் வைத்துள்ளார். தியாகராஜன் வாடகை தருவதில்லை. சேகர் மாதம் ரூ.5000/- வாடகையாக செலுத்தி வருகிறார். அந்த வாடகையை நான் தான் வாங்கி வருகிறேன். அய்யந்துரை மற்றும் அவரது வாரிசுகளுக்கு சேரவேண்டிய வாடகையை நான் வசூல் செய்வது ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

R Velaras
Digitally signed by R Velaras
Date: 2026.09.01 17:41:42 +0530

I Additional District Judge,

Salem